# நெல்லை மத்திய மாவட்டத்தில் 200 பேர் கழகத்தில் இணைந்தனர்!

## அமைச்சர் கே.என்.நேரு முன்னிலையில்!

நெல்லை.டிச.15.

நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க ஏற்பாட்டில் நாம் தமிழர் கட்சியினர் 100 பேர், அ.தி.மு.க.வைச் சேர்ந்த 100 பேர் நெல்லை மத்திய மாவட்ட அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்வில் கழக முதன்மை செயலாளர் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு முன்னிலை யில் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர்.

முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் தலைமையை ஏற்றும், கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் கழக பணிகளை கருத்தில் கொண்டும் நாம் தமிழர் கட்சி சேர்ந்த மத்திய மாவட்டச் செயலாளர் கண்ணன் தலைமையில் 100 நிர்வாகிகளும்,அ.தி.மு.க. மேகலிங்கபுரம் ரமேஷ், வழக்கறிஞர் விஜய்,கரையிருப்பு சங்கர் ஆகியோர் தலைமையில் 100 அ.தி.மு.க.வினரும் ஆக மொத்தம் 200 பேர்கள் கழகத்தில் இணையும் நிகழ்வு நெல்லை மத்திய மாவட்ட கழக அலுவலகத்தில் மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் போது கழக முதன்மை செயலாளர் நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே.என்.நேரு முன்னிலை யில் அ.தி.மு.க,நாம் தமிழர் கட்சியை சேர்ந்த நிர்வாகிகள் 200 பேர்கள் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர்.

கழகத்தில் இணைந்த அவர்கள் அனைவரையும் அமைச்சர் கே.என்.நேரு வரவேற்று கழக இருவண்ண வேட்டியை வழங்கினார்.

நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன்,பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வகாப், மாநில வர்த்தக அணி இணை செயலாளர் மாலை ராஜா,தலைமை செயற்குழு உறுப்பினர்கள் பேச்சி பாண்டியன்,ஏ.எல்.எஸ்.லெட்சுமணன்,

பாளை தொகுதி பார்வையாளர் வசந்தம் ஜெயக்குமார்,நெல்லை தொகுதி பார்வையாளர் முத்துச் செல்வி, மாவட்ட அவைத் தலைவர் முருகன்,துணைச் செயலாளர்கள் சுரேஷ், தர்மன்,கிரிஜா குமார்,மாநகர செயலாளர் சு.சுப்பிர மணியன்,பொதுக்குழு உறுப்பினர் பரமசிவஅய்யப்பன், துணை மேயர் ராஜ், முன்னாள் மேயர் சரவணன் முன்னாள் மாவட்ட துணை செயலாளர் ஆ.க. மணி, பொருளாளர் பூக்கடை அண்ணாதுரை, முன்னாள் பொருளாளர் அருண்குமார், மேலப்பாளையம் மண்டலத் தலைவர் கதிஜா இக்லாம் பாசிலா, பகுதி செயலாளர் துபாய் சாகுல்,மாநகர இளைஞரணி அமைப்பாளர் கருப்பசாமி கோட்டையப்பன், துணை அமைப்பாளர் குருஜி,மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்கள் மீரான்மைதீன், மிக்கேல், முகம்மது சபி,வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் கந்தசாமி, மாணவர் அணி அமைப்பாளர் கல்லூரி பாலா,ஆதிதிராவிடர் நலகுழு அமைப்பாளர் நவநீதன்,இலக்கிய அணி அமைப்பாளர் சின்னத்துரை, பேச்சாளர் ரவி,தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் ராஜவர்மன்,துணை அமைப்பாளர் காதர் ஒலி,வினோத், வர்த்தக அணி அமைப்பாளர் ஷேக்தாவூது,பொறியாளர் அணி துணை அமைப்பாளர் ரத்தினபாலன்,கலை இலக்கியப் பகுத்தறிவு அணி அமைப்பாளர் ராஜகுமாரி,மகளிர் தொண்டரணி அணி அமைப்பாளர் அனிதா, விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர்கள் கே.டி.சி செல்வம், வீரபாண்டியன், மாலதி கண்ணன், மாமன்ற உறுப்பினர்கள் ஆமினா சாதிக்,சுந்தர்,மகளிர் அணி துணை அமைப்பாளர்கள் தேவிகா, ஜோதி பிரியா, பவானி,அருணாசலம், பூங்கனி,சொர்ணலதா,தொண்டரணி துணை அமைப்பாளர்கள் சேக் உஸ்மானி, ஜலீல் ரகுமான், சிவனு பாண்டியன், வட்டக் கழகச் செயலாளர்கள் இசக்கி, ஆவின் கல்யாணி,மேகை செல்வம், மாரிமுத்து, சுந்தர்ராஜன்,மாவட்ட பிரதிநிதி சுரேஷ், தொ.மு.ச. சுந்தரம், தாமிரபரணி தொமுச. கிளைச் செயலாளர் மகாவிஷ்ணு,கேடிசி தொ.மு.ச. பொருளாளர் முருகன், முன்னாள் மாமன்ற உறுப்பினர் சங்கரலிங்கம், கீர்த்தி,அப்துல் ஜபார், ஐயப்பன், வெங்கடேஷ் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# தென்காசி மாவட்டத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகள்!

## அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் நேரில் பார்வையிட்டு ஆய்வு!

தென்காசி.டிச.15.

தென்காசி மாவட்டத்தில் வங்கக்கடலில் ஏற்பட்டுள்ள காற்றழுத்தத் தாழ்வு மண்டலத்தால் தமிழக முழுவதும் கனமழை பெய்து வரும் நிலையில் தென்காசி, தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டத்திற்கு ரெட் அலர்ட் விதிக்கப்பட்ட நிலையில், 12.12.2024 அன்று காலை முதல் தென்காசி மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் கனமழை பெய்து வந்த நிலையில், நேற்று முன்தினம் (13.12.2024) தென்காசி மாவட்டத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே. எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

ஆலங்குளம் தொட்டியான் குளம் பகுதியினை நேரடியாக பார்வையிட்டும், தென்காசி சிற்றாறு பாலத்தினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டும்,குற்றாலம் மெயின் அருவியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்ட பகுதியினையும், செங்கோட்டையிலுள்ள தஞ்சாவூர் குளத்தினையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் தெரிவித்ததாவது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின் படி, தென்காசி மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் கன மழை பெய்து வருவதால்,மழை வெள்ளத்தால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.மழையினால்பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் தீயணைப்பு மீட்புப் படையினர் மூலம் பொதுமக்கள்மீட்கப்பட்டு நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டு,அரசு சார்பில் அவர்களுக்குத் தேவையான நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது.மழை தொடர்ந்து பெய்து வருவதால் பொதுமக்கள் நீர்நிலைகளுக்குச் செல்லாமல் பாதுகாப்பாக இருக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் தெரிவித்தார்.

பின்னர், குற்றாலம் கலைவாணர் கலையரங்கில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு தங்க வைக்கப்பட்டுள்ள 77 நரிக்குறவர் குடும்பங்களைச் சேர்ந்த 277 நரிக்குறவர் இன மக்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறி, அவர்களுக்கு அரிசி, பருப்பு,எண்ணெய், தட்டு, போர்வை, பாய் உள்ளிட்ட நிவாரணப் பொருட்களை அமைச்சர் கே.கே.எஸ். எஸ்.ஆர்.இராமச்சந்திரன் வழங்கினார்.

இந்த ஆய்வின் போது மாவட்ட கண்காணிப்பு அலுவர் சங்கர், மாவட்ட ஆட்சியர் ஏ.கே கமல் கிஷோர்,தென்காசி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பழனிநாடார், சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் ஈ.ராஜா, தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் ஜெயபாலன்,மாவட்ட வருவாய் அலுவலர் சீ. ஜெயச்சந்திரன், ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் திவ்யா மணிகண்டன், தென்காசி நகர்மன்ற தலைவர் ஆர்.சாதிர்,தென்காசி வருவாய் கோட்டாட்சியர் லாவண்யா, தென்காசி வட்டாட்சியர் ராம்குமார் மற்றும் அரசு அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### நெல்லை மாவட்டத்தில் - அனைத்து அரசுத்துறை

# வளர்ச்சித் திட்டப் பணிகள் தொடர்பான அரசு அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம்!

## பேரவைத் தலைவர் மு.அப்பாவு தலைமை – அமைச்சர் கே.என்.நேரு பங்கேற்பு!

நெல்லை.டிச.15-

நெல்லை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நெல்லை மாவட்டத்தில் நடந்து வரும் அனைத்து அரசுத் துறையின் வளர்ச்சி திட்டப் பணிகள் தொடர்பான அரசு அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சரும் நெல்லை மாவட்ட பொறுப்பு அமைச்சருமான கே.என்.நேரு பங்கேற்று 25 அரசுத்துறை சார்ந்த அதிகாரிகளுடன் ஆய்வு பணி மேற்கொண்டார்.

பின்னர் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :-

தென் மாவட்டங்களில் மழை பெய்து வருகிறது. இதன் மூலம் குளங்கள் நிரம்பும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது நெல்லை மாநகராட்சி நகராட்சி பேரூராட்சிகளில் மழையால் மக்கள் பாதிக்காத வகையில் மழையை சமாளித்து அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் பட்டுள்ளது. மாஞ்சோலையில் தற்போது 69 குடும்பங்கள் மட்டுமே உள்ளதாக ஆட்சியர் தெரிவித்துள்ளார். முதலமைச்சர் அவர்கள் மாஞ்சோலை மக்களுக்கு 17 வகையான உதவிகளை அறிவித்துள்ளார்கள். அவர்களுக்கு இடம் வேண்டுமென்றால் பட்டா வழங்கவும், கட்டிடம் கட்டித் தர வேண்டும் என்றால் வீடு கட்டி தரவும்,வீடு ஒதுக்கீடு வேண்டுமென்றால் அதை வழங்கவும் அரசு தயாராக உள்ளது. கடன் கேட்டாலும் வழங்கப்படும். மகளிர் உரிமைத் தொகை தகுதி உள்ளவர்களுக்கு வழங்கப்படும்.

நெல்லை மாவட்டத்திற்கு விரைவில் முதலமைச்சர்கள் வருகை தருவார்கள். அப்போது ரூபாய் 4 ஆயிரம் கோடியில் சோலார் தொழிற்சாலையை திறந்து வைக்க உள்ளார்கள். மேலும் பாளை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ரூபாய் 80 கோடியில் அமைக்கப்பட்டுள்ள கூடுதல் கட்டிடம் தாமிரபரணி, நம்பியாறு, கருமேனியாறு இணைப்பு திட்ட ஆகியவற்றை திறந்து வைத்து, ரூபாய் 400 கோடியில் அமைக்கப்படும் மேற்கு புற வழிச் சாலை திட்டத்திற்கு அடிக்கல் நாட்ட உள்ளார்கள். திட்டப் பணிகளை முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைத்து நலத்திட்டங் களை வழங்க உள்ளார்கள்.

சென்னையில் தற்போது 6 சென்டிமீட்டர் மழை பெய்த போதிலும் ஒரு சப்வேயில் கூட தண்ணீர் தேங்கவில்லை. எந்த சப்வேயிலும் போக்குவரத்து நிறுத்தம் செய்யவில்லை. பொதுமக்கள் பாதிக்காத வகையில் அனைத்து வகையான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளது. முதலமைச்சர்கள் கேரளாவில் இருந்த போதிலும் தமிழகத்தின் மழை தொடர்பான தகவலை அவ்வப்போது கேட்டறிந்து ஆலோசனை வழங்கி வருகிறார்கள்.

இவ்வாறு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்தார்.

அப்போது நெல்லை மாவட்ட கண்காணிப்பு அலுவலர் சந்தீப் நந்தூரி, மாவட்ட ஆட்சியர் மரு. கா.ப. கார்த்திகேயன், நகராட்சி நிர்வாக இயக்குனர் சிவராசு, பேரூராட்சிகள் இயக்குனர் கிரண் குராலா, குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குனர் தட்சிணாமூர்த்தி, நெல்லை மாநகர காவல்துறை ஆணையாளர் ரூபேஷ் குமார் மீனா, நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன், சட்டமன்ற உறுப்பினர்கள் மு.அப்துல்வகாப் (பாளை) நயினார் நாகேந்திரன் (நெல்லை) ரூபி மனோகரன் (நாங்குநேரி) மாநகராட்சி மேயர் கோ.ராமகிருஷ்ணன், மாநகராட்சி ஆணையாளர் சுகபுத்ரா, துணை மேயர் ராஜு, மாவட்ட ஊராட்சி மன்ற தலைவர் ஜெகதீஷ், மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் சிலம்பரசன் உள்பட அரசுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### அதிவேக தகவல் தொழில் அமைப்பை மேம்படுத்த

# 6ஜி அலைக்கற்றை தொழில்நுட்பம் அறிமுகப்படுத்த திட்டமுள்ளதா?

## மக்களவையில் டி.எம். கதிர்ஆனந்த் கேள்வி!



புதுடெல்லி, டிச.15-

நாட்டில் அதிவேக தகவல் தொடர்பு அமைப்புகளை மேம்படுத்த 6G ஸ்பெக்ட்ரம் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்த ஒன்றிய அரசிடம் ஏதாவது திட்டம் உள்ளதா என்று மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற தொகுதி எம்பி கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

அது வருமாறு:-

நாட்டில் அதிவேக தகவல் தொடர்பு அமைப்புகளை மேம்படுத்த 6G ஸ்பெக்ட்ரம் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்த ஒன்றிய அரசு திட்டமிட்டுள்ளதா மற்றும் அப்படியானால், அதன் விவரங்கள், இல்லையெனில் அதற்கான காரணங்கள்?

ஒன்றிய அரசின் பல்வேறு துறைகளின் கீழ் உள்ள தகவல் தொடர்பு அமைப்புகளில் 6G அலைக்கற்றையை பிரத்தியேகமாக பயன்படுத்துவதற்கு ஒன்றிய அரசிடம் ஏதேனும் முன்மொழிவு உள்ளதா? அப்படியானால் அதன் விவரங்கள்; மற்றும்

நாட்டில் 6ஜி அலைக்கற்றை சேவை ஒதுக்கீடு செய்வதிலிருந்து எதிர்பார்க்கப்படும் விளைவுகள் என்ன? என்று அவர் கேள்வி எழுப்பினார்.

இதற்கு ஒன்றிய அரசின் தகவல் தொடர்பு மற்றும் ஊரக வளர்ச்சிக்கான மாநில அமைச்சர் டாக்டர் பெம்மாசானி சந்திர சேகர் எழுத்து பூர்வமாக அளித்த பதில் விவரம்.

தற்போது, 6G தொழில்நுட்பம் சர்வதேச அளவில் வளர்ச்சி நிலையில் உள்ளது மற்றும் நம் நாட்டில் இச்சேவை 2030க்குள் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பிரதமர் இந்தியாவின் 6G தொலைநோக்கு "பாரத் 6G விஷன்" ஆவணத்தை மார்ச் 23, 2023 அன்று வெளியிட்டார். 2030க்குள் 6G தொழில்நுட்பத்தின் வடிவமைப்பு, மேம்பாடு மற்றும் வரிசைப்படுத்துதலில் முன்னணி பங்களிப்பாளர் பாரத் 6G விஷன் கொள்கைகளை மலிவு, நிலைத்தன்மை மற்றும் எங்கும் என்று அடிப்படையாகக் கொண்டது. மேலும், தொலைத்தொடர்புத் துறையானது பாரத் 6ஜி தொலைநோக்குப் பார்வையின்படி செயல்திட்டத்தை உருவாக்க உள்நாட்டுத் தொழில்துறை, கல்வித்துறை, தேசிய ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் தரநிலை அமைப்புகளின் கூட்டணியான 'பாரத் 6ஜி அலையன்ஸ்' அமைப்பதற்கு வசதி செய்துள்ளது.

அதிர்வெண் பட்டைகள் 44004800 MHz, 7125 8400 MHz (அல்லது அதன் பாகங்கள்), மற்றும் 14.8 15.35 GHz சர்வதேச தொலைத்தொடர்பு ஒன்றியத்தில் (ITU) சர்வதேச மொபைல் தொலைத்தொடர்புகளின் (IMT) பயன்பாட்டிற்காக ஆய்வு செய்யப்படுகிறது. இந்த ஆய்வு முடிவுகளின் அடிப்படையில், 2027 ஆம் ஆண்டு உலக வானொலி தொடர்பு மாநாட்டில் IMT பயன்பாட்டிற்கான இந்த பட்டைகளை அடையாளம் காண்பது குறித்த முடிவு எடுக்கப்படும். இந்த அலைவரிசை பட்டைகள் '6G' என்றும் அழைக்கப்படும் 'IMT2030'க்கு பரிசீலிக்கப்படும்.

தற்போது 600 மெகா ஹெர்ட்ஸ், 700 மெகா ஹெர்ட்ஸ், 800 மெகா ஹெர்ட்ஸ், 900 மெகா ஹெர்ட்ஸ், 1800 மெகா ஹெர்ட்ஸ், 2100 மெகா ஹெர்ட்ஸ், 2300 மெகா ஹெர்ட்ஸ், 2500 மெகா ஹெர்ட்ஸ், 3300 மெகா ஹெர்ட்ஸ் & 26 ஜிகா ஹெர்ட்ஸ் ஆகியவை இந்த IMT அடிப்படையிலான சேவைகளுக்காக அடையாளம் காணப்பட்டுள்ளன. ஏலத்தில் நிர்ணயிக்கப்பட்ட விலையைச் செலுத்திய பிறகு இந்தப் பேண்டுகளில் ஸ்பெக்ட்ரம் வாங்கிய TSPS ஆனது, சாதனச் சூழலின் கிடைக்கும் தன்மையின் அடிப்படையில் 2G/3G/4G/ 5G/6G உட்பட எந்தத் தொழில்நுட்பத்தையும் பயன்படுத்த முடியும்.

இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் கூறியுள்ளார்.

### தஞ்சை பெரிய கோவிலை

# ரூ. 25 கோடியில் மேம்படுத்த நடவடிக்கை!

## மாநிலங்களவையில் - சு. கல்யாண சுந்தரம் கேள்விக்கு அமைச்சர் பதில்!



புதுடெல்லி, டிச.15-

மாநிலங்களவை தி.மு.க.உறுப்பினர் எஸ்.கல்யாணசுந்தரம் அவர்கள் நாடாளுமன்றத்தில்கேள்வி நேரத்தின்போது தஞ்சாவூர் பெரிய கோவிலை யுனெஸ்கோ நிறுவனம் உலகப்பாரம்பரியக்கலாச்சாரச் சின்னங்களில்ஒன்றாகஏற்கனவே அறிவித்துள்ளது. இந்தத் திருக்கோயிலை மேம்படுத்தும் திட்டம் ஒன்றிய அரசின் சுற்றுலாத் துறையிடம் உள்ளதா? இதற்காக ஏதேனும்,நிதிஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளதா எனக் கேள்வி எழுப்பினார்,

அந்தக் கேள்விக்கு ஒன்றியசுற்றுலாத்துறைஅமைச்சர் கஜேந்திர சிங் ரூ.25 கோடியில் தஞ்சை பெரிய கோயில்மேம்படுத்தப்படும் என மாநிலங்களவையில் எழுத்துமூலம் பதிலளித்துள்ளார்

அதன் விவரம் வருமாறு :

தஞ்சாவூரில் உள்ள மாபெரும் சோழர் காலப் பெரியகோயில் உள்ளிட்ட இந்தியாவின் பல்வேறு சுற்றுலாத் தலங்களும் மேம்படுத்தப்படுவதை ஒன்றிய சுற்றுலா அமைச்சகம் ஊக்கம் அளித்து வருகிறது. இதில்,விளம்பரநிகழ்வுகள், மாநிலஅரசுகளின்கண்காட்சிகள் மற்றும் திரு விழாக்களை ஏற்பாடு செய்வதற்கான பங்குதாரர்கள், கண்காட்சிகள், வலைத்தளம் மற்றும் சமூகஊடகங்களில் பங்கேற்பது உள்ளிட்ட பல்வேறு முன்முயற்சிகள் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

ஒன்றிய சுற்றுலாத்துறை அமைச்சகம்தனதுஉள்நாட்டுச் சுற்றுலா அலுவலகம் மூலம் உலக சுற்றுலா தினக் கொண்டாட்டங்கள், சர்வதேச யோகா தினம், பாரம்பரிய நடைபயணங்கள் போன்ற தொடர்ச்சியான பல்வேறுநடவடிக்கைகளை ஏற்பாடு செய்கிறது. உலகப் பாரம்பரிய தளத்தின் கலாச்சார மற்றும் வரலாற்று முக்கியத்துவத்தைமுன்னிலைப் படுத்த தஞ்சாவூரில் உள்ள பெரியகோவில்தேர்வுசெய்யப்பட்டுள்ளது.

நாட்டில் சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக மாநிலங்கள்/யூனியன்பிரதேசங்களுடன் இணைந்து சுற்றுலாத் தலங்களின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கான வலுவான கட்டமைப்பை உருவாக்கும் நோக்கத்துடன்அமைச்சகம் தனது உள்நாட்டுச் சுற்றுலா (சுதேச தர்ஷன்) திட்டத்தைப் புதுப்பித்துள்ளது. சவால் அடிப்படையிலான இந்த இலக்கு மேம்பாட்டுத்திட்டத்தின்கீழ் ரூ. 25 கோடி செலவில் ரூ. 2.0 துணைத் திட்டத்தின் கீழ் கலாச்சாரம்மற்றும்பாரம்பரியப் பிரிவில் தஞ்சாவூர் அடையாளம் காணப்பட்டுள்ளது.இத்திட்டத்தின்கீழ் தஞ்சாவூர்பெரியகோவிலில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும் என ஒன்றிய சுற்றுலாத்துறை அமைச்சர்திரு.கஜேந்திரசிங் மாநிலங்களவையில் கூறினார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சு.கல்யாணசுந்தரம் தெரிவித்துள்ளார்.



திருப்புவனம் மேற்கு ஒன்றிய தி.மு.க. செயற்குழு கூட்டம் அவைத் தலைவர் பொன்.இளங்கோவன் தலைமையிலும் ஒன்றிய செயலாளர் வசந்தி சேங்கைமாறன் முன்னிலையிலும் நடைபெற்றது. கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்களை மாவட்ட கழக துணைச் செயலாளர். திருப்புவனம் பேரூராட்சி சேர்மன் த.சேங்கைமாறன் விளக்கிப் பேசினார் இக்கூட்டத்தில் நாகூர் கனி, ரகமத்துல்லா கான், பொற்கோ, ராமலிங்கம், ஈஸ்வரன், சுப்பையா, அக்கினிராஜ், சேகர், மணிகண்டன், ரவி, சுப்பிரமணியன், மகேந்திரன், சக்திமுருகன், மீனாட்சி சுந்தரம், ராமு, தேவதாஸ், கோபால், காளிதாஸ், ராஜா, அண்ணாமலை மற்றும் கிளைக்கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### காட்டூர் கோபால்
### டிசம்பர் 15 (1978)



தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவைப் பொதுச்செயலாளர், கழக சட்டமன்ற மேலவை உறுப்பினர் உள்ளிட்ட பொறுப்புகளை ஏற்றுப் பணியாற்றியவர்.

தொழிலாளர்களின் நலன் காக்கும் பொருட்டு 'உழைப்பாளி' என்ற இதழைத் துவக்கி, அதன் ஆசிரியராகவும் பெரும் பணி ஆற்றினார்.

"இயக்கத்தோடு இணைந்து வளர்ந்த பகுத்தறிவுச் சிங்கம்! ஆயிரம் கொடுமைகள் இழைக்கப்பட்ட போதும் ஆடாது அசையாது இலட்சியம் காத்திட்ட பெருமகன்! நெருக்கடி காலத்தில் மிசாக் கைதியாக இருந்தபோது அவருக்கு கிடைத்த பரிசு நெஞ்சு வலி. அதுவே அவரை நம்மிடமிருந்து பறித்துக் கொண்டுவிட்டது. தொழிலாளர்களுக்காக வாதாடுகிற திறனும் – போராடுகிற துணிவும் நிறைந்த எனதருமை உடன்பிறப்பு" என தலைவர் கலைஞரால் புகழப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**